# கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்

## போட்டிகளுக்கான நடுவர்களின் குழுக்களை தெரிவு செய்தலுக்கான விண்ணப்பம் கோருதல் - 2019

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்திட்டங்களுக்கு நடுவர்களாக பணியாற்றுவதற்கு பின்வரும் கலைத்துறையில் ஆற்றலுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருத்தமானவர்கள் **உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம் செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்**. எனும் முகவரிக்கு **28.02.2019** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**நடுவர்களின் துறை**

1.கட்டுரை
2.சிறுகதை
3.கவிதை
    a.புதுக்கவிதை
    b.மரபுக்கவிதை
4.நடனம்
5.நாடகம்
6.ஓவியம்
7.இசை
    a.வாய்ப்பாட்டு இசை
    b.வாத்திய இசை
8.பாரம்பரிய கலைகள்
    a.முல்லைப்பாங்கு
    b.மன்னார்ப்பாங்கு
    c.கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை)
    d.இசை நாடகம்
9.வில்லுப்பாட்டு
10.சிறந்த நூற்தெரிவு
    a.நாவல்
    b.அறிவியல்
    c.சிறுவர் இலக்கியம்
    d.மொழிபெயர்ப்பு
    e.ஆன்மீகம்
    f.வரலாறு மற்றும் தொல்லியல்
    g.பாரம்பரிய ஆய்வுகள்

விண்ணப்பங்களினை பின்வரும் மாதிரிக்கமைய தயாரித்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உதவிப்பணிப்பாளர், (பதில்)
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

ஒப்பம் : திரு.சி.சத்தியசீலன்
செயலாளர்

உதவிப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்